## அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம் - 2019

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (''கூட்டுத்தாபனம்'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **எல்கேஏஎஸ் 01 - நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்:**<br><br>எல்கேஏஎஸ்1- இன் 32 ஆம் பிரிவுக்கு முரணாக, ரூபா 34,203,486 தொகையான செலவு மீதிகள் கடன்பட்டோருக்கு எதிராகவும் ரூபா 21,675,922 மற்றும் ரூபா 280,709,569 தொகையான வரவு மீதிகள் அட்டுறுக்கள் மற்றும் கடன்கொடுத் | கடன்பட்டோர்களின் செலவு மீதி ரூபா 34,203,486 மற்றும் வர்த்தக கடன்பட்டோர்களின் வரவு மீதி ரூபா 49,673,711 ஆகியவை நிதிக் கூற்றுக் களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>அட்டுறுச் செலவுகளின் ரூபா 1,428,851 தொகை யினை 2020 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களில் தனித்த | சாத்தியமான பொருண் மையான தவறான கூற்றுக்களைத் தவிர்ப் பதற்காக நிதி கூற்றுக் களில் அனைத்து நிலுவைகளையும் கொண்டுவருவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | தோருக்கு எதிராகவும் எதிரீடு செய்யப்பட்டிருந்தன. | னியாக காண்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | **எல்கேஏஎஸ் 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**<br><br>எல்கேஏஎஸ் 08 இன் 45 மற்றும் 49 ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஒப்பீட்டுத் தகவல்கள் திருத்தியமைக்கப்படா ததுடன் மீளாய்வாண்டிற்கான உரிமை த்துவ மாற்றங்கள் கூற்றில் மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 85,010,739 தொகையான முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் தொடர்பில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட் டிருக்கவில்லை. அத்துடன், மேற்படி அநேக சீராக்கங்கள் இருப்புக்களின் ஊடாக மேற்கொள்ளப் பட்டிருந்த மையால் இருப்புக்கள் கணக்கின் கீழ் இருப்புச் சீராக்கமாக ரூபா 116,808,031 தொகையான செலவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களில் முன்னைய ஆண்டுச் சீராக்கல்களை வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கூட்டுத்தாபனம் இலங் கை கணக்கீட்டு நியம ங்களை பின்பற்றுவ தனை உறுதி செய்ய வேண்டுமென்பதுடன் அதனை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |
| (இ) | **எல்கேஏஎஸ் - 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**<br><br>முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 7,827,715, ரூபா 12,493,686, ரூபா 122,478,634, ரூபா 180,936,803 மற்றும் ரூபா 55,470,130 தொகையான முறையே கணனி பாகங்கள் மற்றும் மென்பொருட்கள், அலுவலகத் தளபாடங்கள், இயந்தி ரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள்மற்றும் ஏனைய சொத்துக்கள் எல்கேஏஎஸ் - 16 இன் 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தை மதிப்பிடாமலும் அதற்க மைய கணக்கீடு செய்யப்படாமலும் கூட்டுத்தாபனத்தால் தொடரச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.<br><br>நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பூச்சிய பெறுமதியை அல்லது ஒரு ரூபா பெறுமதியைக் காண்பிக்கின்ற 84 இயந்திரங்கள் மற்றும் உபகர ணங்கள், மற்றும் 17 மோட்டார் வாகனங்கள் மீள விலைமதிக்கப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீள விலைமதிப்பதற்கும் அவற் றின் பெறுமதிகளை புத்தக ங்களிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் | கூட்டுத்தாபனம் இலங் கை கணக்கீட்டு நியம ங்களை பின்பற்றுவ தனை உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) **எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ் 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**<br><br>கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக உரிமையுடைய துணைக்கம்பனியான திவ்கோசா (பிரைவட்) லிமிடட் நீண்டகாலமாக செயற்படாதுள்ளதுடன் இக்கம்பனியை கலைப்பதற்கு 2006 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. கலைக்கும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்திய டையாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத் தினால் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவ்கோஷோவா (தனியார்) லிமிடெட் நீண்ட காலமாக இயங்காத கம்பனியாக இருப்பதனால் ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கப்ப டவில்லை. பெறத்தக்க நிலுவைகளுக்கு 2017 ஆம் ஆண்டு முதல் நட்டக்கடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது கம்பனியை கலைக்கும் செயல்முறை மேற்கொள்ளப்பட்டு வருவ துடன் முடிவிடல் செயற்பா ட்டின் போது நடைமுறை யில் பெறத்தக்க நிலுவை களுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனம் இலங் கை கணக்கீட்டு நியம ங்களை பின்பற்றுவ தனை உறுதி செய்ய வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1163 ஆம் இலக்க வேலைத்தளத் திலுள்ள 343 இருப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவி ல்லை. | கணக்காய்வு கண்டுபிடிப்பு சரியானது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடு களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சாத்தியமான பொருண் மையான தவறான கூற்றுக்களைத் தவிர்ப் பதற்காக நிதி கூற்றுக் களில் அனைத்து மீதிகளையும் எடுத்து வருவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் |
| (ஆ) செலுத்தவேண்டிய தரப்பினரை அல்லது நோக்கத்தை இனங்காணாது ரூபா 20,247,079 தொகையான அட்டுறுச் லெவினம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கருத்துரை தரப்படவில்லை | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுப் பரிகாரங்க ளின் செவ்வைத் தன்மையினையும் நம்பகத் தன்மையினை யும் உறுதிப்படுத்துவ தற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் / பதிவேடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொருளா தாரச் சேவைக் கட்டண (நுளுஊ) மீதி மற்றும் நுளுஊ மீதான தண்டப்பண மீதிக்கும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையிலுள்ள | கூட்டுத்தாபனம் எதிர் கொண்டுள்ள நிதிச் சிக்கல் களால் ESC செலுத்தப்பட வில்லை. எவ்வாறாயினும், ESC கடனாக எடுக்கப்ப | நிதி கூற்றுக்கைகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டு மீதிகளை பட்டோலைகளுடன் கணக்கிணக்கம் செய்வ |

| | | | |
|---|---|---|---|
| | மீதிக்கும் இடையே ரூபா 64,994,218 தொகையான வித்தியாசம் அவதானிக் கப்பட்டது. | டாமை காரணமாக இந்த செலுத்த வேண்டிய ESC கொடுப்பன வுகள் மற்றும் மிகை அறவீடு ஆகியவை நிதிக் கூற்றுக்களிற்கு எடுக்கப்படவில்லை. | தற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களிலுள்ள செலுத்த வேண்டிய பொருளாதாரச் சேவைக் கட்டண (ESC) மீதிக்கும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையிலுள்ள மீதிக்கும் இடையே ரூபா 1,940,779 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ESC கணிப்பீட்டில் செய்ய ப்பட்ட தவறு காரணமாக வேறுபாடு எழுந்துள்ளது. எவ்வாறாயினும், ESC கொடுப்பனவை உள்நாட்டு திணைக்களத்திற்கு சமர்ப் பிக்கும் போது நாங்கள் அதை சரிசெய்வோம். | நிதி கூற்றுக்கைகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டு மீதிகளை பட்டோலைகளுடன் கணக்கிணக்கம் செய்வ தற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களிலுள்ள செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி (VAT) மீதிக்கும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான பட்டோலையிலுள்ள மீதிக்கும் இடையே ரூபா 7,750,209 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இறுதிக் கணக்குகளுக்கும் பேரேட்டு பட்டோலைகளி ற்கும் இடையிலான வேறுபாடு முக்கியமாக மேலதிக VAT கட்டணம் காரணமாக ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இதனை தள்ளுபடி செய்யும் என்ப தனால் மிகையான VAT கட்டணத்தை நாம் கணக் குகளிற்கு எடுப்பதற்கு கருத்திற் கொள்ளவில்லை. | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுப் பரிகாரங்க ளின் செவ்வைத் தன்மையினையும் நம்பகத் தன்மையினை யும் உறுதிப்படுத்துவ தற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான பட்டோலையின் பிரகாரம் பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி (NBT) மீதான தண்டப்பணமாக முறையே ரூபா 206,449,781 மற்றும் 1,587,692 தொகைகள் காண்பிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இந்தக் கட்டணங்களிற்காக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | VAT மற்றும் NBT செலுத்தப்படாததால் VAT மற்றும் NBT இன் மிகை அறவீட்டுக் கட்டணம் எழுந் துள்ளது. முக்கியமாக கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மூலதன சிக்கல்களை நாங்கள் சந்தித்துள்ளோம். எவ்வாறாயினும், மூலதன பிரச்சினைக்கான தீர்வை அமைச்சின் உதவியுடன் உடனடியாக கண்டுபிடிக்க உள்ளோம். | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுப் பரிகாரங்க ளின் செவ்வைத் தன்மையினையும் நம்பகத் தன்மையினை யும் உறுதிப்படுத்துவ தற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் படி இலங்கை ரெயில்வே இடமிருந்து பெறவேண்டிய மீதிக்கும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை ரெயில்வே இடமிருந்து கிடைக்கப்பெற்ற மீதி உறுதிப்படுத்தலுக்கும் இடையே ரூபா 12,613,582 வேறுபாடு அவதானிக்கப் பட்டது. | ரூபா 12,613,582 பெறத்த க்க தொகையிலிருந்து, 2020 ஆம் ஆண்டில் ரூபா 4.6 மில்லியன் பெறப்பட்டு ள்ளது. பெறத்தக்க தொகையில் ரூபா 3.8 மில்லியன் தொகை பிடி காசாகும். எஞ்சிய பெறத் | நிதி கூற்றுக்கைகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டு மீதிகளை பட்டோலைகளுடன் கணக்கிணக்கம் செய்வ தற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

தக்க தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| | கணக்காய்வு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | முன்கொண்டு வரப்பட்ட பெறுமதிசேர் வரி மீதிகள் | 11,362,032 | 2013 ஆம் ஆண்டிலிருந்து பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | தவறைத் திருத்தயமையால் கேகாலை விதிச் செயற் திட்டத்திற்கு பெ.சே.வ. சீராக்கத்தை செய்தமை காரணமாக இந்த வேறுபாடுகள் எழுந்துள்ளன. இருப்பினும், முறைமையைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுமதிசேர் வரி மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக பட்டோலைகளும் வயதுப் பகுப்பாய்வும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| | செலுத்த வேண்டிய பெ.சே.வ. மீதி | 29,568,451 | பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | | |
| (ஆ) | கடன்கொடுத்தோர் மீதி | 60,510,770 | தனிப்பட்டோர் பட்டோலை மற்றும் வயதுப் பகுப்பாய்வு | தேவையான தகவல்களை நாம் எதிர்காலத்தில் வழங்குவோம் | கடன்கொடுத்தோர் மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக பட்டோலைகளும் வயதுப் பகுப்பாய்வும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கடன் மற்றும் முற்பண மீதிகள் | 5,897,573 | விபரமான பட்டோலை | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | கடன் மற்றும் முற்பண மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | பாதுகாப்பு வைப்புக்கள் | 919,250 | பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | பாதுகாப்பு வைப்பு மீதியினை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக பட்டோலைகளும் வயதுப் பகுப்பாய்வும் கணக்காய்விற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | கொள்வனவு முற்பணம் (பேலியகொட) | 21,484,694 | வயதுப் பகுப்பாய்வு | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | கொள்வனவு முற்பண மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | சில்லறை முற்பணங்கள் | 15,530,195 | விபரமான பட்டோலைகள் | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | சில்லறை முற்பண மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | நாணயக் கடித எல்லைக் கணக்கு | 94,604,465 | விபரமான பட்டோலை | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | கணக்கு மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | உப ஒப்பந்த முற்பணங்கள் | 15,299,042 | விபரமான பட்டோலை | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | ஒப்பந்த முற்பண மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | கொள்வனவு முற்பணம் | 296,310 | விபரமான பட்டோலை | முடியுமான அளவு விரைவாக பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | கொள்வனவு முற்பண மீதிகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து ஏற்றுக் கொள்வதற்காக விபரமான பட்டோலைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | நீதிமன்ற கட்டளைப்படி ஒப்பந்த தாரருக்கான செலுத்துகைகள்<br><br>- CML-MTD கொன்ஸ்ட்ரக்ஷன் 30,810,901<br><br>- வர்த்தகத் துறைப் பாதுகாப்பு 1,153,843 | செலுத்திய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் பற்றிய விபரங்கள் | தேவைான விபரங்களை உடனடியாக வழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது | ஒப்பந்த காரர்களிற்குச் செலுத்திய கொடுப்பனவுகளை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்து, ஏற்றுக் கொள்வதற்காக கொடுப்பனவு விபரங்களும் செலுத்த வேண்டிய மீதிகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 196,478,484 தொகையான வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டியவைகளும் நிர்மாணக் கடன்பட்டோரும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளிற்கும் மேல் நிலுவையாக உள்ளன. மேலும், குகுலேகங்க செயற்திட்டத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 12,121,011 மீதி 07 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது. மேற்படி மீதிகளின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்குரியதாக காணப்படுகின்றது. | கருத்துரை தரப்படவில்லை | நிலுவையிலுள்ள மீதிகள் தாமதமின்றி அறவிடப்படுதல் வேண்டும் அல்லது அந்த நிலுவையிலுள்ள மீதிகளின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொங்ரீட் தளக் கடன்பட்டோர், வீதி சமிக்கை முறைமை, பெறவேண்டிய வேைல தாமதக் கட்டணங்கள் மற்றும் பெற வேண்டிய பிடிகாசு என்பவற்றின் ரூபா 423,041,807 கூட்டுத்தொகை 03 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேற்படி மீதிகளின் அறவிடப் படும் தன்மை ஐயத்திற்குரியதாக காணப்படுகின்றது. | கருத்துரை தரப்படவில்லை | முழுமையாகப் பூரணப் படுத்திய செயற்திட்டங்களுடன் தொடர்புடைய கடன்பட்டோர், தாமதக் கட்டணங்கள், பெறவேண்டியவை மற்றும் பிடிகாசு என்பவற்றை தாமதிக்காது அறவிடுவதற்கு உரிய பொறிமுறையொன்று அறிமுகப் படுத்தப்பட வேண்டும். |
| (இ) | வழங்குனர்களிற்குச் செலுத்திய ரூபா 7,851,432 தொகையான முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மீதிகளின் | கருத்துரை தரப்படவில்லை | வழங்குனர்களிற்குச் செலுத்திய முற்பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்காலத் தீர்ப்பனவு ஐயத்திற்குரியதாக உள்ளது. | | |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 61,501,342 பெறவேண்டிய முற்பண மீதியிலுள்ள ரூபா 12,711,603 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்பட்டிருக்க வில்லை. இந்த மீதிகளின் செவ்வை த்தன்மை மற்றும் காணப்படுநிலை என்பவற்றை கணக்காய்வில் மதிப்பாய்வு செய்ய முடியவில்லை. | கருத்துரை தரப்படவில்லை | பல ஆண்டுகளிற்கு முன்னர் முழுமையாகப் பூரணப்படுத்திய செயற் திட்டங்களுடன் தொடர் புடைய பெறவேண்டிய முற்பண மீதியினை தாமதிக்காது அறவிடு வதற்கு உரிய பொறி முறையொன்று அறிமுப் படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பூரணப்படுத்திய மற்றும் கைவிடப் பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் கிடைத்திருந்த ரூபா 21,373,283 தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் இதுவரை தீர்க்கப்ப டாதிருந்ததுடன் அந்த முற்பணங் களின் தீர்க்கப்படுதல் சாத்தியம் ஐயத்திற்கிடமானதாக உள்ளது. | கருத்துரை தரப்படவில்லை | நீண்டகாலமாக நிலுவை யிலுள்ள சாத்தியமான வேலை ஆரம்பித்தல் முற்பணங்களை தாமத மின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 99,902,523 தொகையான செலுத்த வேண்டிய வாடிக்கையாளர் மீதியில் ரூபா 74,021,473 தொகை 03 ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப் படாதுள்ளது. மேலும், ரூபா 23,467,283 கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 2,859,268 செலுத்தவேண்டிய மீதிகள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவை யாக உள்ளன. இந்த மீதிகளின் செவ்வைத்தன்மை மற்றும் காணப் படுநிலை என்பவற்றை கணக்காய் வில் மதிப்பாய்வுசெய்ய முடியவி ல்லை. | கருத்துரை தரப்படவில்லை | நீண்டகாலமாக நிலுவை யிலுள்ள சாத்தியமான கடன்கொடுத்தோர் மீதி களை தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிபபிரமாணங்கள் கோவையின் நிதிப்பிர மாணம் 396 | 5 - 9 வருடங்களிற்கு மேலான ரூபா 1,725,904 பெறுமதியான 09 தேறப்படாத காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுக் காண்பு களில் குறிப்பிடப்பட் டுள்ள விசேட நெறிப்ப டுத்தல்களுடன் இணக் கமுறுவதற்கு ஒழுங்கு கள் செய்யப்படும். | நிதிப்பிரமாணங்க ளுடன் இணங்கு வதற்கு உரிய கவனம் செலுத்து தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக் கையின் 5.1.3 அம் பந்தி | சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக் கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் கூடிய நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வேண்டப்பட்ட வாறு அனுப்பிவைக்கப்பட் டிருக்கவில்லை. | கணக்காய்வுக் காண்பு களில் குறிப்பிடப்பட் டுள்ள விசேட நெறிப்ப டுத்தல்களுடன் இணக் கமுறுவதற்கு ஒழுங்கு கள் செய்யப்படும். | பொது முயற்சி கள் சுற்றறிக்கை யுடன் இணங்கு வதற்கு உரிய கவனம் செலுத்து தல் வேண்டும். |
| (இ) | 2009 யூலை 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத் துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட் டிருக்கவில்லை. | கணக்காய்வுக் காண்பு களில் குறிப்பிடப்பட் டுள்ள விசேட நெறிப்ப டுத்தல்களுடன் இணக் கமுறுவதற்கு ஒழுங்கு கள் செய்யப்படும். | முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு உரிய கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 843,901,384 நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 18,523,726 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 862,425,110 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனைகள் கிரயம், நிர்வாக செலவினம், ஏனைய செலவினம் மற்றும் நிதிச் செலவினம் அதிகரித்தமையே இந்த பின்னடைவிற்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 1158 ஆம் இலக்க வேலைத்தளத்தில் மொத்தமாக ரூபா 2,117,446 தொகையான இருப்புக்க ளின் பெறுமதியும் 1163 ஆம் இலக்க தலிகல வேலைத்தளத்தில் 255 இருப்பு விடயங்களும் காணாமல் போயிருந்த போதிலும், விசாரணை யினை மேற்கொண்டு பொறுப்புடைய தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இருப்பு மெய்மையாய்வுக் குழுவின் படி, அங்கு மேலதிகமாகவும் பற்றாக்கு றையாகவும் இருப்பு விடயங்கள் காணப்பட்டு ள்ளன. ஆனால் அந்த திகதியில் அங்கு களஞ்சிய க்காப்பாளர் ஒருவர் இருக் காமையால் இருப்புப் புத்த கங்கள் நாளதுவரையாக் கப்படவில்லை. ஆகையால் எந்தவொரு இருப்பு நட்ட மும் எங்களுக்கு அறிவிக்க ப்படவில்லை. இந்த விடயம் குறித்து வகனம் செலுத்தி ஏதேனும் சிக்கல்கள் காணப்படின் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டத்தைக் குறைப்பத ற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டில் 15 செயற்திட்டங்களிலிருந்து ரூபா 131,660,281 தொகையான நட்டம் இனங்காணப்பட்டிருந்ததுடன் 10 செயற்திட்டங்கள் தொடர்பில் திருத்தியமைத்த ஒப்பந்த பெறுமதியினை மிகைத்து ரூபா 68,924,162 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நிதிப் பிரச்சினை காரணமாக செயற்திட்டங்களை உரிய காலத்தில் பூரணப்படுத்த முடியாது போனமையால் மேலதிக கிரயம் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக சில செயற்திட்டங்கள் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. | நிதிசார் நட்டங்களை நீக்கி இலாபத்தன்மையை மேம்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) 34 மோட்டார் வாகனங்கள், இயந்திர மற்றும் உபகரணங்கள் கூட்டுத்தாபன வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன. | | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.2 குறைவாகப் பயன்படுத்திய நிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அங்கீகரித்த எல்லையினை மீறி வங்கி ஒன்றிடமிருந்து ரூபா 3,738,883 தொகையான வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டிருந்தது. | வாடிக்கையாளரிடமிருந்து அறவிட வேண்டிய நிதிகளை அவர்கள் செலுத்தியிருக்காமையால் ஏற்பட்ட வங்கி வட்டி காரணமாக அங்கீகரித்த எல்லையினை மீறி ரூபா 3,738,883 தொகையான வங்கி மேலதிகப்பற்று இடம்பெற்றுள்ளது. | கூட்டுத்தாபனத்தில் உரிய தொழிற்படு மூலதனத்தையும் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்தையும் பேணுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 பெப்ரவரி, ஏப்ரல், மே, யூலை, ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் முறையே ரூபா 160 மில். ரூபா 39 மில். ரூபா 92 மில். ரூபா 62 மில். ரூபா 95 மில். ரூபா 40 மில். மற்றும் ரூபா 245 மில். தேறிய காசுப் பாய்ச்சல்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு விகிதமும் விரைவுச் சொத்து விகிதமும் பின்னடைவு கண்டிருந்தன. | கணக்காய்வு கண்டுபிடித்தல் சரியானது. | கூட்டுத்தாபனத்தில் உரிய தொழிற்படு மூலதனத்தையும் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்தையும் பேணுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| உப ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்கையில் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாது கூட்டுத்தாபனத்திற்கு மனித சக்தியினை வழங்கியிருந்த | கொங்ரீட் தளங்கள் போன்ற நிரந்தர செயற்திட்டங்களிற்காக கூட்டுத்தாபனம் கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றியுள்ளது. | கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 23 உப ஒப்பந்த காரர்களிற்கு ரூபா 150.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | ஆனால், நிர்மாணச் செயற் திட்டங்கள் தற்காலிகமா னவை என்பதனால் அவற் றுக்கு இந்த நடைமு றைகளை பின்பற்ற முடியா துள்ளது. இருப்பினும் கொடுப்பனவுகளிற்காக அங்கீகரித்த வீதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 489 ஆகவிருந்த அதேநேரம் உள்ளபடி யான பதவியணி 628 ஆகவிருந்தது. அதற்கிணங்க இது கூட்டுத்தாப னத்தின் பல்வேறு பதவிகளிற்கு 139 ஊழியர்களின் மிகையான ஆட்சேர்ப்பை காட்டுகின்றது | அரசாங்க விதி முறைகளிற்கு அமைய, அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்ப ட்டமையால் உள்ளபடியான மற்றும் அங்கீகரித்த பதவிய ணிக்கு இடையே வேறுபாடு எழுந்துள்ளது. மேலும், தற்காலிக அடிப்படையில் புதிய செயற்திட்டங்கள் கிடைக்கும் போது நாம் அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களை ஆட்சேர்க்கின்றோம். | நெகிழ்வுத் தன்மையான பதவியணி மட்டங்களை பேணுவதற்கும் கால அடிப்படையில் மீளாய் வினை மேற்கொள்வ தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சிவில் பொறியியலாளர் களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 19 ஆன போதிலும், ஒப்பந்த அடிப்ப டையின் கீழ் 52 சிவில் பொறியிய லாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | செயற்திட்டங்கள் வரையறுத்த காலத்திற்கு இடம்பெறுவதனால் செயற்திட்டங்களிற்கான பொறி யியலாளர்களையும் உதவிப் பதவியணியினரையும் நாம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்கின்றோம். | நெகிழ்வுத் தன்மையான பதவியணி மட்டங்களை பேணுவதற்கும் கால அடிப்படையில் மீளாய் வினை மேற்கொள்வ தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி 29 பாதுகாப்பு உத்தியோக த்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | கணக்காய்வுக் கண்டுபிடித்தல் சரியானது. | நெகிழ்வுத் தன்மையான பதவியணி மட்டங்களை பேணுவதற்கும் கால அடிப்படையில் மீளாய் வினை மேற்கொள்வ தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |